## திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (20.02.2016 முதல் 24.02.2016 வரை)

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை – 612101
போன் : 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in - Fax: 04352472881

==========================================================================

தேதி :19.02.16

### கடந்த 3 நாளில் நிலவிய வானிலை (16.02.2016 – 18.02.2016)

| காரணிகள் | கடந்த வார வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0.0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 33 – 34 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 24 – 25 |
| மேக மூட்டம் | 4 |
| ஈரப்பதம் (%) | 55 – 83 |
| காற்றின் வேகம் (கி.மீ.) | 2 |

### அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | தேதி-1 20/02/16 | தேதி-2 21/02/16 | தேதி-3 22/02/16 | தேதி-4 23/02/16 | தேதி-5 24/02/16 |
| மழை (மி.மீ) | 2 | 0 | 0 | 2 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 33 | 33 | 33 | 33 | 33 |
| குறைந்தபட்சவெப்பநிலை(டி.செ) | 25 | 25 | 25 | 25 | 25 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| ஈரப்பதம் (%) | 56 – 80 | 56 – 80 | 56 – 80 | 56 – 80 | 56 – 80 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணிக்கு) | 2 | 2 | 2 | 2 | 2 |
| காற்றின் திசை | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு |

20.02.2016 முதல் 24.02.2016 வரை வானம் சற்று மேகமூட்டத்துடன் காணப்படும். மழை இல்லை

***வேளாண் அறிவுரைகள் :***

**முக்கிய பயிர்: நெல்**

**தாளடி: முதிர்ச்சி மற்றும் அறுவடை பருவம்;**

**நெல் தரிசு-பயறு : வளர்ச்சி மற்றும் பூக்கும் பருவம்**

- அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள தாளடி நெல்லினை அறுவடை செய்து நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும்.
- நெல் தரிசு பயிரில் இலை புழுக்கள் சேதம் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த குளோரிபைரிப்பாஸ் 500 மி.லி./ஏக்கர் என்ற அளவில் இலைகள் நன்கு நனையும் படி தெளிக்கவும்.
- நெல் தரிசு பயிறுவகைப் பயிர்களில் இலைவழி தெளிப்பாக பயறு அதிசயம் ஏக்கருக்கு 2 கிலோ அல்லது டி.ஏ.பி கரைசல் 20 கிராம் / லிட்டர் பூக்கும் தருணத்திலும், 15 நாட்கள் இடைவெளியிலும் தெளிக்கவும்.

**கால்நடைகளுக்கு**

- கால்நடைகளுக்கு புல்மீது உள்ள பனித்துளிகள் காய்ந்தப் பிறகு மேய்ச்சலுக்கு விடுவதால் ஒட்டுண்ணி புழுக்கள் தாக்காமல் பாதுகாக்கப்படுகிறது.

இயக்குநர்